Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

யுத்தமும் வன்முறையும் மாநிடத்தின் இறுநிலை. சுபிட்சமும் சுதந்திரமும் நிலவும் வாழ்வை நோக்கி முன்னேறுவோம்.


வெளியீடு-20 | 25 கார்த்திகை 2003 | விலை:- 07.00

UNIVERSITY OF JAFFNA LIBRARY MAY 2004 PERIODICALS DIVISION

## சாம்பலில் இருந்து..........

## தோழர் பத்மநாபா சில நினைவுகள்

தமிழ் சமூகத்தின் தேசிய விடுதலையுடன் இலங்கையில் சமூக பொருளாதார விடுதலையையும், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக இருக்கக் கூடிய சர்வதேச சமூகத்தின் நட்புறவுக்காகவும் வாழ்ந்து பாசிச வாதிகளின் படுகொலை தாக்குதலில் பன்னிரு தோழர்களுடன் பலியாகியவர் தோழர் பத்மநாபா. ஆளுமைமிக்கத் தோற்றமும் தீட்சண்யமான பார்வையும் மலையென சவால்கள் எழுந்தாலும் "நோ புரெளப்ளம்" என்று சொல்லி வாழ்ந்து மடிந்தவர் தோழர் பத்மநாபா.



அவர் ஒன்றரை தசாப்தங்களாக மக்களின் விடிவுக்காக உழைத்து தனது 39வயதில் மரணம் என்னும சவாலை எதிர் கொண்டார். தமிழ் சமூகத்தின் உன்னதமான தலைவர்களெல்லாம் மக்களை நேசித்த மகத்தான மனிதர்களெல்லாம் இவ்வாறுதான் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகம் தீராத வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு சில அறிகுறிகள் தென்படும் என்று மார்க்சிம் கோர்க்கி "நான் எவ்வாறு எழுதக்கற்றுக் கொண்டேன்"என்ற தமது நூலில் குறிப்பிட்டிருந்தார். இந்த மரணங்கள் தோழர் பதமநாபாவின் மரணம் எமது சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கும் ஒரு தீராத வியாதியின் பிரதிபலிப்பு. தலைசிறந்தவை எல்லாவற்றையும் அழித்தொழிக்கும் வியாதியே அது.

மகா புருஷன் எனப்படுபவன் ஏனையோரை விட தீர்க்கதரிசனம் மிக்கவன் என்றார் ரஷ்ய தத்துவஞானி பிளக்கானோவ். இற்றைக்கு 15 ஆண்டுகளுக்கு முன் வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை உருவாக்குவதில அவர் தீர்க்கமான பங்களிப்பை வழங்கியிருந்தார். அவருடைய அரசியல் தூரதிருஷ்டி ஒரு பேரழிவில் இருந்து சமூகத்தை காப்பாற்றும் அக்கறையை கொண்டிருந்தது. அவர் மலையக மக்களை பெரிதும் நேசித்தார்.

இலங்கையில் நடக்கும் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்கை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரான சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தேசிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் பெண்கள் அத்தனை சமூக பிரிவினர் மீதும் அதீத ஈடுபாட்டை காட்டினார்.

தோழமை என்றால் என்ன என்பதற்கு அவர் ஒரு வாழும் உதாரணமாக திகழ்ந்தார். அவருடைய இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட தமிழ் நாட்டினதும், இந்தியாவினதும், இலங்கையினதும்,

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தோழர் றொபேட் ஒரு மகத்தான மானிடன்

தோழர் றொபேட் சமகாலத்தின் முக்கியமான தலைவர். அவர் சமுதாயத்தில் மறுமலர்ச்சி என்ற எழிலார்ந்த கனவை கொண்டிருந்தார். தமிழ் மக்களின் சுயமரியாதை, கௌரவமான வாழ்வு என்பதும் தமிழ் சமுதாயத்தில் ஜனநாயகம் மனித உரிமை என்பனவும் அவரின் உயிர் மூச்சாக இருந்தன.



இலங்கையின் சகல இன மக்களுடனும் ஐக்கியக்கப்பட்ட வாழ்வு என்பதிலும் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

உண்மை, நேர்மை, கண்ணியம், தூரதிருஷ்டி என்பன அவரின் அருங்குணங்களாக இருந்தன. அவர் எப்போதும் போலித்தனங்களை வெறுத்தார். உண்மையை யதார்த்தத்தை அவர் திடசித்தத்துடன் எதிர்கொண்டார். அவர் இற்றைக்கு கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றத்தினூடாக தனது சமூக அரசியல் பிரவேசத்தை மேற்கொண்டார்.

அவர் தனது 45வது வயதில் தனது மரணத்தை எதிர்கொள்ளும் வரை தனது வாழ்வு முழுவதையும் தனது சமூகத்திற்காக அர்ப்பணித்திருந்தார். வசீகரமான தோற்றம் கொண்ட தோழர் றொபேட் வசீகரமான மனத்தையும் கொண்டிருந்தார். இது ஒரு அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளரின் கூற்று.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## இணக்கப்பாட்டு அரசியலுக்கான ஒரு இறுதிச்சந்தர்ப்பம்

இலங்கையில் மாறிமாறி பதவிக்கு வருவதற்கு இரு கட்சிகளுக்கும் மூலதனமாக இருந்தது இனவாத அரசியலே.

கால் நூற்றாண்டுகால யுத்தத்திற்கும் 65,000 பேரின் உயிரிழப்பிற்கும் இந்த இரு கட்சிகளின் போட்டி அரசியலுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

நாட்டின் நலனைவிட சொந்த அதிகார நப்பாசைகள் முக்கியத்துவம் பெற்றதனால் தான் இந்த நாட்டில் வளர்ச்சிக்கு பதிலாக சிதைவு ஏற்பட்டது.

1950களில் ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளை விட சமூக பொருளாதார நிலைகளில்,கல்வித்தர நிலையில் முன்னிலையில் காணப்பட்ட இலங்கை இடையறாத வீழ்ச்சிக்குள் சிக்கியதற்கு காரணம் பழம்பெருமை பேசிய மூடர்களும், அரசியல் அதிகார நப்பாசை கொண்டவர்களுமே.



இந்த நாட்டில் ஆக்கபூர்வமான மாற்றம் பற்றிய மனப்பான்மை பத்தில் இடதுசாரிகளிடம் மாத்திரம் தான் காணப்பட்டது.

ஆனால் இந்த மக்களைப்பிளவு படுத்தும் குரோதங்களையும விரோதங்களையும் வளர்த்தது போட்டி அரசியலே. காலனி ஆதிகத்தின் பங்களிப்புடன் வளங்களைப்பகிர்ந்து கொள்வதில் மக்களிடையே மோதல்கள் உருவாக்கப்பட்டன. அது சமூகத்தின் வெவ்வேறு தளங்களுக்கும் பரவியது.

இதன் பிரசவமே தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம். ஆனால் அது இன்று தமிழ் அதிகார அகங்கார மாகப் சிதைவடைந்துள்ளது. அது வடக்கு கிழக்கில் மாற்று அரசியல் கருத்துக்களுக்கோ செயற்பாடுகளுக்கோ அங்கே இடமில்லை [illegible] வித்துள்ளது.



அமைசசர் பீரிஸ்சும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முழு அதிகாரமும் ஒருவரிடமே இருக்கவேண்டும் எனக் கூறுகிறார்.

இன்று பன்முகத்தன்மை பற்றிய கருத்து வேகமாக வளாச்சி பெற்று வருகிறது.

இலங்கையின் அரசியல் களத்தில் ஒரேயடியாக நல்ல மாற்றங்கள் நிகழவில்லை என்று கூற முடியாது.

1994இல் சந்திரிகா அவர்கள் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண பரந்தளவிலான முயற்சிகளை மேற்கொண்டார்.

2002இல் பிரதமர் ரணிலும் ஒரு முயற்சியை ஆரம்பித்திருகிறார். ஆனால் இந்தியாவின் வற்புறுத்தலில் அவர்கள் தலையை பாத்திரத்தினுள் அமுக்கி வேது பிடிக்கசெய்ததால் 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் சாத்தியமானது.

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## பரந்த சிந்தனை

இலங்கை ஒரு சிறிய தீவாக இருப்பதாலோ என்னவோ இந்த நாடு எத்தனை வளமுடையதாக இருந்தாலும் சண்டை சச்சரவுகளும், கண்ணீரும், ரத்தமும் சிந்தும் நாடாகவே காணப்படுகிறது. இன முரண்பாட்டு யுத்தம் 60,000 உயிர்களை காவு கொண்டு விட்டது. ஆனாலும் குறுகிய சிந்தனை, மத, இன, சாதி, பிரதேச முரண்பாடுகளுக்குள் சிக்கி இந்த நாடு திணறிக்கொண்டிருக்கிறது. "சாதிச் சண்டை போச்சோ உங்கள் சமய சண்டை போச்சோ குப்பை விரும்பும் நாய்க்கே பவுசு கொற்ற தவிசும் உண்டோ" இந்த பாரதியின் கவிதை வரிகள் யாருக்கு பொருந்துகிறதோ, எதுக்கு பொருந்துகிறதோ இல்லையோ இலங்கையின் இன்றைய நிலைக்கு பொருந்தும். இலங்கை 25,000 சதுர மைல் பரப்பளவை கொண்டது 1,90,00,000 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். சிறந்த கடல் வளம், சிறந்த மண் வளம், சிறந்த பசுமை, சிறந்த உயிரியல் பூங்காவாக இருந்தாலும் இது ஸ்பீல்ட் பேர்க்கின் "டைனோசோர்" சினிமாவில் வரும் ஈவிரக்கமற்ற வன்முறை நிறைந்த ஒரு அரங்காகவே காட்சியளிக்கிறது.

தமிழ் மக்கள் இலங்கை சுதந்திரத்திற்கு பின்னான 50 வருடங்களில் தமது சமத்துவ உரிமைகளை நிலைநாட்டுவதற்காக சந்தித்த இழப்புக்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையக தோட்டத் தொழிலாளர்கள் எந்த அடிப்படை உள்ளக கட்டமைப்பு வசதியுமின்றி இன்றும் பிரித்தானியர்கள் கட்டிக் கொடுத்த லயன் அறைகளில் கிடந்து அல்லாடுகிறார்கள். சிங்கள கிராமபுறத்து வாழ்க்கைதான் என்னவாம்? பாரபட்சமான இலங்கையின் சமூக அமைப்பில் மிகவும் பாரிய பற்றாகுறைகளுடன்தான் கிராமத்து சிங்கள மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 70களிலும், 80களிலும் நடைபெற்ற கிளர்ச்சிகள் அதன் குறியீடுகளாக இருந்தன. முஸ்லீம் மக்கள் சிங்கள பேரினவாத வன்முறைக்கும் தமிழ் மேலாதிக்கவாதிகளின் அராஜகத்திற்கும் இலக்காகி தமது தனித்துவம் பற்றி சிந்தித்து நிற்கிறார்கள்.

இந்த நாட்டின் தேசிய அரசியல் என்பது துரதிஷ்டவசமாக இந்த நாட்டின் யதார்த்தமான பல்லின பாங்கை பிரதிபலிப்பதாக இல்லை. தேசிய கட்சிகள் என்பவை சிங்கள கட்சிகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் எமது அண்டை நாடான இந்தியா பல நூற்றுக் கணக்கான இனக் குழுக்களையும் மொழிவழி தேசியங்களையும் கொண்டிருப்பதாலோ என்னவோ அதன் சுதந்திரம் நிர்மாணிக்கப்படும் போது மதச் சார்பின்மை என்பது முதநிலைப்பட்டது. தேசிய அரசியல் என்பது நாட்டின் பல்வேறு தரப்பினரையும் பிரதிபலிப்பதாக இருந்தது. ஒரு ஆந்திராவைச் சேர்ந்தவர், ஒரு கர்நாடகத்தைச் சேர்ந்தவர், ஒரு பஞ்சாபை சேர்ந்தவர் இந்தியாவின் பிரதமராக வரக்கூடியதாக இருந்தது. இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஒரு இஸ்லாமிய தமிழர் இந்தியாவின் ஜனாதிபதியாக வரமுடிந்தது. கேரளாவின் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவைச் சார்ந்த ஒரு மலையாளியும், ஜனாதிபதியாக வரமுடிந்தது. ஆனால் இலங்கையில் இத்தகைய நிலைமை நேர் மாறானது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் இலங்கையின் தேசிய சிங்கள அரசியல் கட்சிகள் ஒன்றின் ஆக்கப்பூர்வமான செயற்பாட்டை மற்றது மறுதலித்தே வந்திருக்கிறது. ஒன்றின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை மற்றது செவிமடுப்பதில்லை. பௌத்த மதபீடங்களும் சகட்டு மேனிக்கு தங்களின் பங்களிப்பை செய்தன. இணக்கப்பாடுடன் கூடிய சாதகமான அம்சங்களை எண்ணிப்பார்க்கும் ஒரு அரசியல் துரதிஷ்டவசமாக எமது நாட்டில் இல்லாமல் போய்விட்டது. அரசியல் கட்சிகள் குழுக்கள் என குத்துவெட்டு பாடுகளுடன் கூடியதாகவே இங்கு அரசியல் நிகழ்கிறது. மக்களுக்கு தலைமை தாங்குபவர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை பண்புகளை அது இழந்துள்ளது.

தேசிய அரசியல் இவ்வாறென்றால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயம் என்று கூறுபவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றக்கூடிய அத்தனை ஆரோக்கியமான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார தேடல்கள் விழுமியங்கள் அத்தனையையும் நசுக்கி அழித்து ஒரு அதிகாரத்தை நிறுவியுள்ளார்கள்.

ஜனநாயகம், மனித உரிமை என்பன வடக்கு-கிழக்கை பொறுத்தமட்டடில் அர்த்தம் இழந்து போயுள்ளன.

இலங்கையர்களுக்கு ஒப்பீட்டளவில் உலக அனுபவங்களுக்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் கிணற்றுத் தவளைகளாக பழம் பெருமை பேசுபவர்களாக முன்னேற்றத்தை தேங்க வைப்பவர்களாக சமூகத்தில் செல்வாக்கு செலுத்தும் பல குழுவினர் இருக்கிறார்கள்.

மாறிவரும் உலகில் எல்லைகள் தகர்ந்து வருகின்றன. மனிதர்கள் நெருங்கி வருகிறார்கள். மனித குலம் ஒன்றே என்ற பதாகை மெல்ல மேலெழுந்து வருகிறது. ஆனால் எமது நாட்டில் தேங்கிய குட்டையில் பல நாள் சென்ற அழுக்கு நீரில் வாழ்வதில் பலர் சுகானுபவம் காண்கிறார்கள். இந்த குட்டை சுத்தீகரிக்கப்பட வேண்டும். ஓடும் நீர் அதன் மேல் பாய்ச்சப்பட வேண்டும்.

ஒரு கலாச்சார மறுமலர்ச்சி, பண்பாட்டு மறுமலர்ச்சி தேவைப்படுகிறது. மற்றவர்களுடன் பரஸ்பரம் கண்ணியமாக நடந்து கொள்வதற்கு பழக்கப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. வடக்கு கிழக்கின் ஆயுத மேலாண்மையில் இருந்து தெற்கின் பாதாள உலக ஆயுத அராஜகங்கள் வரை அடியோடு களையப்பட வேண்டிய தேவையிருக்கிறது.

இலங்கையின் பல்வேறு இன மக்களின் சுதந்திரமான ஒன்று கூடலில் உலகத்திற்கான ஜன்னல்களை அகலத்திறந்து இலங்கை சுபீட்சப் பாதையில் நடைபோட வேண்டும். இது எம் கனவு

## தோழர் பத்மநாபா சில ...........

மக்களே அவர் எத்தகைய மானிடர் என்பதற்கு சான்று பகன்றன.

அவர் மிகவும் அழகான கனவை கண்டிருந்தார். அது மனித குலத்தின் மகிழ்ச்சியான வாழ்வு என்பது மாத்திரம்தான். அதற்காக அவர் முழுமையாக தன்னை அர்ப்பணித்திருந்தார். இந்திய தேசிய சுதந்திர போராட்ட தலைவர்களுடனும், இடதுசாரி தலைவர்களுடனும், இலங்கையின் சமூக பொருளாதார மாற்றங்களுக்காக பாடுபட்ட மனிதர்களுடனும் அவர் நட்பு பூண்டிருந்தார்.

அன்றாட உணவிற்கு பணம் கிடைக்கிறதோ இல்லையோ ஈழச் செய்தி என்ற மாதாந்த செய்தி தொகுப்பை கொண்டு வருவதிலும் சுவரொட்டிகள் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினையை தமிழகத்தில் வெளிக்கொணர்வதிலும் ஊடகங்களில் செய்திகள் இடம் பெறச் செய்வதிலும் அவர் ஆரம்ப நாட்களில் இருந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

தோழர்களுடன் சமகால பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்களை அனுபவம் வாய்ந்த தலைவர்கள் கல்விமான்களைக் கொண்டு அவர் ஏற்பாடு செய்யவும், தவறவில்லை. சமூகத்தினதும் ஸ்தாபனத்தினதும் வளர்ச்சிக்காக அவர் நேர காலம் பாராது உழைத்தார்.

மக்களை நேசித்த மானிடன் என்பதே அவருக்கு நாம் வழங்கும் சிறப்பான மரியாதையாக இருக்கும். அவர் நவம்பர் 19ம் திகதி பிறந்தவர். இந்தியாவின் பெருமைமிகு பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் தோழர் பத்மநாபா அவர்களும் ஒரே திகதியில் தான் பிறந்தவர்கள். அதனை காலஞ்சென்ற இந்திய பிரதமர் ரஜீவ்காந்தி அவர்கள் தோழர் நாபாவின் மறைவிற்கு விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் இருவரும் ஒரே உயரிய இலட்சியங்களுக்காக வாழ்ந்தவர்கள் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்

### 1ம் பக்கத் தொடர்ச்சி

பட்டிருந்தது.

எதையெல்லாம் இந்த கால் நூற்றாண்டு காலத்தில் இழந்திருக்கிறோம் என்பதற்கு தோழர் நாபாவின் மறைவு ஒரு எடுத்துக் காட்டு.

ஒரு புதிய தலைமுறை பிரகாசமான தலைவரின் படுகொலை அது. ஹிட்லரின் நாசிசம் ஜேர்மனியினதும், ஐரோப்பாவினதும் மாபெரும் தலைவர்களை எவ்வாறு காவு கொண்டதோ அவ்வாறுதான் தமிழ் பாசிசமும் தோழர் நாபாவை காவு கொண்டது.

அவர் சேகுவேரா, கொங்கோவின் விடுதலை வீரர் பற்றிஸ் லுமும்பா போன்ற தலைவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர். வரலாறு இம் மகத்தான மனிதனை என்றோ ஒரு நாள் முன்நிறுத்தும். தற்போதைய சமூக முன்னேற்றத்துக்கு எதிரான சக்திகள் அன்று வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இருப்பார்கள்.

**தோழர் நாபா நாமம் நீடூழி வாழ்க!.**

## தோழர் றொபேட் ஒரு.............

சமகாலத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் தலைவர்களில் தோழர் றொபேட் முக்கியமானவர். நம்பிக்கைகள் தகர்ந்து சவால்கள் சூழ்ந்த போதெல்லாம் அவர் மனம் கலங்கியதில்லை. தாம் வழி நடத்திய தோழர்களை, தான் எந்த மக்களுக்காக தனது வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்தாரோ அவர்களை அவர் மரணிக்கும் வரை கைவிடவில்லை.

ஒரு இலட்சியவாதியாக நடைமுறைவாதியாக அவர் செயற்பட்டார். எந்தவிதமான மூடநம்பிக்கைக்கும், துதிபாடல்களுக்கும் அவர் இடமளித்ததில்லை. தன்னுடன் பழகிய பத்திரிகையாளர்கள் கல்விமான்கள், பொதுமக்கள் ஆகியோரின் மனங்களில் அவர் ஒரு உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருந்தார்.

ரஷ்யாவின் புகழ்பெற்ற நாவல் ஆசிரியன் ஒஸ்துரொவ்ஸ்கி தனது வீரம் விளைந்தது நாவலில் "திடீர் நோயோ சோக விபத்தோ ஒரு மனிதனின் வாழ்விற்கு உலை வைக்கலாம். ஆனால் அவன் இந்த சமூகத்திற்காக அர்ப்பணித்து வாழ்ந்தான் என்ற உரிமை பெற்றவனாக மரணிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஒஸ்திரோவ்ஸ்கி குறிப்பிட்ட அந்த இலட்சிய மனிதனாக தோழர் றொபேட் வாழ்ந்து காட்டினார். மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் அவர் யாழ் மாநகர சபையில் ஒரு சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த பங்கை ஆற்றினார். ஜனநாயகத்திற்கும், மனித உரிமைகளுக்கும் அவர் உறுதியாக குரல் கொடுத்தார்.

யாழ்ப்பாணத்தின் அறிவு கருவூலமான யாழ் நூலகத்தை திறந்து வைக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியுடன் நின்றிருந்தார். "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்றான் பாரதி. ஆனால் எமது சமூகத்தில் அது நிஜ உண்மையாக அமைந்திருந்தது. அடக்கு முறைக்குள் புதைந்து போயிருந்த சமுதாயத்தில் அவர் ஒரு ஒளிக்கீற்றாக தென்பட்டார்.

தனது சொந்த வாழ்க்கையில் அவர் பிரமச்சரியத்தை கடைபிடித்தார். தமது இளம் பராயத்தில் திருமணம் செய்யாமல் மரணித்துப்போன தோழர்களுக்காக அவர் அவ்வாறு நடந்து கொண்டார்.

அவரது வரலாறு மிக நீண்ட ஒரு நூலாக எழுதப்பட வேண்டியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இதனை குறிப்பிட்டு விட்டு

### 1ம் பக்கத் தொடர்ச்சி

செல்ல முடியாது.

சமூகத்தின் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் எல்லோரும் தலை தப்பி ஓடிக்கொண்டிருக்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் அவர் போராடியவர். அவருடன் பழகிய சக இயக்கத் தோழர்கள் நண்பர்கள் மாநகர சபை உறுப்பினர்கள் அரசியல் தலைவர்கள் அவர் மீது பேரபிமானம் கொண்டிருந்தனர்.

தோழர் றொபேட்டை படுகொலை செய்ததன் மூலம் புலிகள் சவாதிகள் வெற்றிபெறவில்லை. அவர்கள் தோற்றுத்தான் போனார்கள். நாகரீகமான தமிழர்களும் நாகரீகமான மானிட சமூகமும் தனது உணர்வுகளை வெளிப்படுத்தியது.

தோழர் றொபேட்டிற்கு தனது இறுதி மரியாதையை செலுத்தியது. இவ்விடத்தில் பாசிசம் தோற்றுத்தான் போனார்கள்.

இன்று சமாதானம், மனித உரிமை தமிழ் மக்களின் அபிலாஷை என்று யாரும் பேசலாம். ஆனால் அவற்றின் பொருள் பொதிந்த அர்த்தத்திற்காக போராடி தோழர் றொபேட்டும் அவர் போன்ற தலைவர்களும், தோழர்களும் போராட்டகாரர்களும் வரலாற்றால் சுமந்துவரபபடுவார்கள்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 22307

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக மனிதனின் சுதந்திரம் மதிக்கப்படாதவரை.........

இலங்கை சுதந்திரமடைந்தபோது பிரித்தானிய அரசுக்கும் இலங்கை மக்களின் தலைவர்களுக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டில் பிரித்தானிய அரசு இலங்கை மக்களிடையே உள்ள பிரச்சினைகள் குறித்து தீர்க்கதரிசனத்தோடு அக்கறை செலுத்தாததன் காரணமாக இன்று தமிழ் சிங்கள மக்களிடையே பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக நம்மில் பலர் கூறி வருகின்றனர்.

ஆயினும் இன்று இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளின் போது தமிழர் தரப்பில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகளை புறக்கணித்து எட்டப்படும் தீர்வு நிலையான, நியாயமான தீர்வாகாது என்பது உணரப்படவில்லை.

யுத்தநிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதான முயற்சிகள் என அரசியல் நகாவுகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது போன்ற தோற்றப்பாடு காணப்பட்டாலும் வடக்கு-கிழக்கில் இடம் பெறுகின்ற ஆட்கடத்தல்களும், படுகொலைகளும் உண்மை நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

### புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்

2002 பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் வடக்கு கிழக்கில் 50இற்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர், ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் அனேகமானவர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். அரசியல் பகைமை காரணமாக கொலலப்படவில்லை தனிப்பட்ட பகைமையே கொலைக்குக் காரணம் என்று காட்டுவதற்கான கவனத்தை திசை திருப்புவதற்கான ஒரு தந்திரம் இது என்பது இப்போது தெரியவந்துவிட்டது.

ஆனாலும் ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டால் இயக்கம் செய்யவில்லை என்று அப்பாவித்தனமாக நம்புபவர்களும், நியாயப்படுத்துபவர்களும் இன்றும் நம்மத்தியில் இல்லாமல் இல்லை.

தமிழ் பத்திரிகைகள் இந்த படுகொலைகள் இனந்தெரியாதவர்களால் செய்யப்பட்டதாக ஒரு செய்தியாக தருவதுடன் நின்றுவிடுகின்றன. அதற்குமேல் அவர்கள் அதுபற்றி எழுதுவதில்லை. என்னதான் பத்திரிகா தர்மம், நடுநிலை, துணிவு என்றெல்லாம் சொல்லிக்கொண்டாலும் தமிழர்கள் மத்தியில் நிலவும் ஜனநாயகம் இதற்குமேல் அவாகள் எழுத இடமளிப்பதில்லை.

இது விளங்கிக்கொள்ளப்படக்கூடிய விடயம் தான். ஆனால், இத்தகைய சூழலில் நடுநிலையோடும், துணிச்சலாகவும் எழுதுவதாக காட்டிக்கொள்வது தான் தமிழ் சமூகத்திற்கு குழிபறிக்கும் விடயம். இன்னும் ஒருபடி மேலே போய் கொலையை புரிந்ததாக அல்லது குற்றத்தை புரிந்தவர்கள் என்று பொதுமக்கள் சந்தேகப்படுபவர்களிடம், பொதுமக்கள் முறைப்பாடு செய்திருப்பதாகவும், அதன்பேரில் அவாகள் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் புலன்விசாரணைகளை தொடங்கியிருப்பதாகவும் பத்திரிகைகள் எழுதுவது ஒரு மோசடி ஆகும்.

வடக்கு கிழக்கில் வெகுஜன அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களின் நிலையும் பத்திரிகைகளின் நிலையை ஒத்ததே. படுகொலைகள் குறித்து கருத்து தெரிவிக்காத மனித உரிமை அமைப்புக்களை வடக்கு-கிழக்கில் தான் பார்க்க முடியும்.



வடக்கு-கிழக்கில் உள்ள வெகுஜன அமைப்புக்கள் புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டில் அல்லது நபர்களுடான கட்டுப்பாட்டில் இயங்குபவையாக இருப்பதனால் சார்புத் தன்மை இயல்பானது. எனவே, அவர்களால் படுகொலைகள் குறித்தோ, வேறு எந்த விவகாரம் குறித்தோ சுதந்திரமாக அபிப்பிராயம் எதனையும் வெளியிட முடிவதில்லை. யாழ் பொது நூலக விவகாரம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இந்த வெகுஜன அமைப்புக்கள் குறிப்பாக வடக்கில் உள்ள வெகுஜன அமைப்புக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் ஜனநாயகத்திற்கு முரணான ஏகபிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களாயிருப்பதை காணலாம்.

இதனால் வெகுஜனங்களின் அபிப்பிராயங்களை பிரதிபலிப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை பிரதிபலித்து வருகின்றனர்.

உண்மையில் வெகுஜன அமைப்புக்களின் பேரில் வெகுஜனங்கள் கருத்துத் தெரிவிப்பதற்கான களம் கபளீகரம் செய்யப்பட்டு விடுகிறது. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கள், அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகள், அதிகாரிகள், படையினருடனான சந்திப்புக்கள் அனைத்திலும், பொங்குதமிழ் நிகழ்வு உட்பட புலிகள் நடாத்தும் விழாக்களிலும் முன்னணியில் நிற்கும் இவர்கள் வெகுஜனங்களின் பிரச்சினைகள் என்று முன்னெடுத்துச் செல்வதெல்லாம் குறிப்பிட்ட ஒரு குழுவினரின் அபிலாசைகளையே.

இவற்றுக்கு மத்தியில் மனித உரிமைகளை, ஜனநாயகத்தை நேசிக்கும் நபர்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு உசிதமான சூழல் இல்லை என்றே தெரிவிக்கிறார்கள். தமது அபிப்பிராயங்கள் புறக்குடத்தில் வார்த்த நீர் போலாவதாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

எது எவ்வாறாயினும் மாற்றுக் கருத்துக்களை வேருடன் சாய்க்கும் நோக்கமும், ஏகபோக அதிகாரத்தின் மீதான பற்றுதலுமே இந்தக் கொலைகள் தொடர்வதற்கான அடிப்படைக் காரணங்களாகும். இந்த பத்திரிகைகளும், வெகுஜன அமைப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் விதைத்ததை அறுவடை செய்ய நேரிடும் என்பதே.

இந்தப் படுகொலைகளைப் புரிந்தவர்கள் யார் என்பதை பொறுத்தே தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தும், நடவடிக்கைகளும் அமையும். இவர்களது கர்ணகடூரமான கண்டனம் அல்லது மௌனத்தை வைத்து படுகொலையைப் புரிந்தவர்கள் யார் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

தமது சகபாடிகள் கொல்லப்பட்ட போது கொலைகளுக்கான காரணம் என்ன? படுகொலையை புரிந்தவர்கள் யார்? என்பது பல சந்தர்ப்பங்களில் தெரிந்திருந்தும் இனந்தெரியாதவர்கள் என்று கூறி [illegible] ளலாம் என்று எண்ணியவர்கள், எண்ணுபவர்கள் இப்போது ஏனைய படுகொலைகள் பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.

தங்களது ஜனநாயக உரிமைகள் பற்றி பேசும் இவர்கள் பிறரது ஜனநாயக உரிமைகள் பற்றிய பிரக்ஞையோடு பேசுவதில்லை. கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது தீவுப்பகுதிக்கு பிரச்சாரத்திற்காகச் சென்ற வேளையில் ஈ.பி.டி.பி. யினரால் தடுக்கப்பட்டு தாக்கப்பட்டது ஜனநாயக விரோதம். வடபகுதியிலிருந்து ஈ.பி.டி.பி வெளியேற வேண்டும் என்று கோருவது ஜனநாயகம்!

புலிகள் பல வருடங்களுக்கு முன்னரே வடக்கு-கிழக்கில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுத்துவரும் விடயம் இவர்களுக்கு விளங்காமலில்லை. இருப்பினும் ஜனநாயக உரிமைகளை நிராகரிக்கும் ஏகபிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொண்டிருப்பது தமது பாராளுமன்றப் பதவிக் காலத்தை பத்திரமாகக் கழிக்க ஏற்ற கவசம் என்பதேயாகும்.

இதனை அவர்கள் தங்களது அரசியல் சாணக்கியம் என்றே சொல்லிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவானவர்களும் அதனை மெச்சிக்கொண்டிருக்கிறார்கள். புலிகளை (ஜனநாயக) வழிக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக நடப்பாகவும், புலிகளை எதிர்த்து முட்டி மோதியவர்கள் எதை சாதித்தார்கள் என ஏளனமாகவும் பேசிக்கொள்கிறார்கள்.

ஏற்கனவே ஜனநாயக வழிக்கு வந்தவர்கள் தொடர்பாக இவர்கள் கொண்டுள்ள நிலைப்பாடு ஜனநாயகத்தின் மீது இவர்களுக்குள்ள பற்று எத்தகையது என்பதை புலப்படுத்தும்.

### கண்காணிப்புக்குழுவின் பணி

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் இந்தப் படுகொலைகள் இடம்பெற்று வருவதால் கண்காணிப்பாளர்களின் பணி இங்கு கவனத்திற்குரியதாகிறது. அவர்கள் இந்தப் படுகொலைகளை தடுப்பதற்கான முயற்சியாக பல சந்திப்புக்களை மேற்கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் படுகொலைகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து வருத்தம் தெரிவிப்பதே இன்றுவரை கண்காணிப்பாளர்களுக்கு இயலுமானதாயிருந்துவருகிறது.

ஒரு சில இடங்களில் கண்காணிப்பாளர்கள் இது தங்களுடைய பணி இல்லை என்று தெரிவித்ததாகவும், இது இலங்கையின் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்ட பிரச்சினை, பொலிசார் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முன்னாள் ஆயுதப்போராட்ட அமைப்புக்களான, ஜனநாயக வழிக்கு வந்துள்ள இதர தமிழ் அரசியல் கட்சிகளின் ஆயுதப் பயன்பாட்டிற்கு தடை விதித்துள்ளது. வீதிச் சோதனைகளையும், தேடுதல் நடவடிக்கைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறது.

எனவே இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியவர்கள், சமாதான முயற்சிகளுடன் தொடர்புடையவர்கள் பதில்சொல்ல வேண்டிய கடமைப்பாடுடையவர்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும சமாதான முயற்சிகளுக்கு, அதற்கு அனுசரணை வழங்கும் நோர்வே அரசின் முயற்சிகளுக்கு மதிப்பளித்து, அந்த முயற்சிகளை ஆதரித்து ஜனநாயக வழிக்கு வந்த இதர தமிழ் அரசியல் கட்சிகள் ஆயுதப்பிரயோகத்தை தவிர்த்துள்ளனர். ஆயுதங்கள் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே அவர்களது பாதுகாப்பை, ஜனநாயக ரீதியிலான அவர்களது அரசியற் செயற்பாடுகளை உறுதி செய்வது புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பும், கடமையுமாகும்.

ஆனால் இந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொல்லப்படுகிறார்கள், மிரட்டப்

**ஆட்சியாளர்களும், ஆயுதப்படைகளும் இழைத்த அநீதிகளும், பாரபட்சங்களும், புறக்கணிப்புக்களும் தான் இனப்பிரச்சினையின் தோற்றம். தமிழர் தரப்புக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையே நடந்து முடிந்த அரைநூற்றாண்டு காலப்பேச்சுவார்த்தைகளும், கால்நூற்றாண்டுகால ஆயுதப் போராட்டமும் தீர்வைப்பெற்றுத்தராத நிலையில் ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம், அனுசரணை, கண்காணிப்பு எல்லோராலும் விரும்பப்பட்டது. ஆனால், தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைகளை தடுக்கும் அவற்றுக்கு நீதி வழங்கும் பொறுப்பு இலங்கையின் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டது. என்று தெரிவித்து ஆட்சியாளர்களிடம் விடப்படுகிறது. இது சாத்தியமானதாயின் இனப்பிரச்சினையும் இருந்திருக்காது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், அனுசரணை, கண்காணிப்பு என்பவற்றுக்கும் அவசியம் இருந்திருக்காது.**

தொடர்ச்சி 04ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக மனிதனின் சுதந்திரம்......

03ம் பக்கத் தொடர்ச்சி

படுகிறார்கள், அவர்கள் ஜனநாயக ரீதியில் மேற்கொண்டுவரும் அரசியல் பணிகள் திட்டமிட்டு தடுக்கப்பட்டுவருகிறது.

மக்கள் தான் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுவது அப்பட்டமான பொய். மக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் அதுவும் உரிமை மீறலே, ஆனால், இவை மக்களின் பேரால் மேற்கொள்ளப்படும் அடாத்துக்கள் என்பதே உண்மை.

எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் செல்லவும், குடும்பத்தினருடன் சேரவும், உறவினர்களை சந்திக்கவும், இன்ப துன்பங்களில் கலந்துகொள்ளவும், உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் மூலம் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், தமது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வருவதற்கும், தொடர்புகொள்வதற்கும் மாற்றுக் கருத்துள்ள அரசியல் கட்சிகளை சேர்ந்த அங்கத்தவர்களுக்கு இருந்த வழிகளை இதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட புலிகளின் பிரசன்னம் அடைத்து விட்டது.

இதர தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களின் குடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் மிரட்டப்பட்டிருக்கிறார்கள், விசாரணைக்காக தமது அலுவலகத்திற்கு வருமாறு வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்று வரை வெவ்வேறு விதமாக இந்த அச்சுறுத்தல் தொடர்ந்தவண்ணமுள்ளது.

ஒப்பந்தத்தின் விதி 2.1ல் உலக சட்ட விதிகளின்படி பின்வரும் செயல்களில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொது மக்களுக்கு எதிரான செய்கைகளில் ஈடுபடுதல் உதாரணமாக புண்படுத்தல், சித்திரவதை செய்தல், ஆள்கடத்தல், பணம், பொருள் பறித்தல் மற்றும் வீண் தொந்தரவுகள் செய்தல்.

ஒப்பந்தத்தின் விதி 3ல் சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றினை நியமித்து இவ் ஒப்பந்தத்தில் உள்ள விதிகளை நடைமுறை பண்ணாது, இவற்றிற்கு முரணாக ஏதும் அநீதி எற்பட்டு இருக்கிறதா என்பதை கண்காணிப்பதற்காக இருதரப்பினரும் தமது முழு ஒத்துழைப்பையும் தம் இரு தரப்பினால் விடும் தவறுகளை அவதானித்து நடவடிக்கை எடுக்கவும், இக் குழு உலக ரீதியாக பரிசீலித்து உடன்படிக்கை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் விதி 4.3 இவ் ஒப்பந்தம் இரு தரப்பினரதும் சம்மதத்துடன் திருத்தப்படலாம் அல்லது சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்று குறிப்பிடுகிறது.

ஆட்சியாளர்களும், ஆயுதப்படைகளும் இழைத்த அநீதிகளும், பாரபட்சங்களும், புறக்கணிப்புக்களும் தான் இனப்பிரச்சினையின் தோற்றம். தமிழர் தரப்புக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையே நடந்து முடிநத அரைநூற்றாண்டு காலப் பேச்சுவார்த்தைகளும், கால் நூற்றாண்டுகால ஆயுதப் போராட்டமும் தீர்வைப்பெற்றுத்தராத நிலையில் ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம், அனுசரணை, கண்காணிப்பு எல்லோராலும் விரும்பப்பட்டது.

ஆனால், தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைகளை தடுக்கும், அவற்றுக்கு நீதி வழங்கும் பொறுப்பு இலங்கையின் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டது என்று தெரிவித்து ஆட்சியாளர்களிடம் விடப்படுகிறது. இது சாத்தியமானதாயின் இனப்பிரச்சினையும் இருந்திருக்காது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், அனுசரணை, கண்காணிப்பு என்பவற்றுக்கும் அவசியம் இருந்திருக்காது.

சட்டம் ஒழுங்கு தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள ஒரு தரப்பான விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவர் தெரிவித்துள்ள அபிப்பிராயத்தை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். சட்டம் ஒழுங்கை பொறுத்தவரையில் மக்கள் நாளாந்தம் அச்சுறுத்தல்கள், களவுகள், கோஷ்டி மோதல்களால் பாதிக்கப்படும் சூழல் இருக்கின்றது. அதனைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு சட்டத்தைக் கையாள்பவர்கள் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதில்லை.

மாறாக சட்டத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்குத் துணையாக அவர்கள் இருப்பதனால் சட்ட துஷ்பிரயோகம் ஏற்படுவதால் மக்கள் வாழ்வின் இயல்புத் தன்மை பாதிக்கப்படுகிறது.

ஆக புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் நேரடியான சம்பந்தம் எதுவுமில்லாத ஏனையோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவானதன் பின்னர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு கண்காணிப்புக் குழுவினர் தெரிவிக்கும் வழிமுறை எத்துணை பொருத்தமானது?

அது மாத்திரமல்ல காலம் காலமாக தமிழர் தரப்புக் கோரிக்கைகளை பலவீனப்படுத்துவதற்கு தமது ஆயுதபலம் உட்பட அனைத்து பலங்களையும் பிரயோகித்த ஆட்சியாளர்களுக்கு தமது பணியை தமிழர் தரப்பே மேற்கொள்வது கசப்பானதாகாது.

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளை கண்காணிப்பதே எமது பணி என்று கண்காணிப்புக் குழு தெரிவித்த சம்பவங்களும் உண்டு. அவர்களுடைய முதன்மையான பணி அது என்பதில் ஐயமில்லை.

ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சாதகமான விளைவுகள் அனைத்திற்கும் உரித்துடையவர்கள் யார்? அவர்களே அதன் பாதகமான அம்சங்களுடன் தங்களுக்குத் தொடர்பில்லை என்று கையை விரிப்பது சரியான அணுகுமுறையாகாது.

ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தை எழுதி ஆயுதங்களை களைய வழிவகுத்தவர்கள் ஆயுதங்களை கையளித்தவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுடன் தங்களுக்குத் தொடர்பில்லை என்று கூறுவது ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் வேலைகள் மேற்கொள்ள வந்தவர்கள் ஆயுதங்களை பிரயோகிக்கும் போது எந்த ஒப்பந்தம் அரசியல் வேலைக்கு வாய்ப்பை வழங்கியதோ அது குறித்த கேள்வி எழவே செய்யும்.

காவலரண்கள், சோதனைச் சாவடிகள் மத்தியிலும் இங்கு படுகொலைகள் நிகழ்ந்திருக்கிறது ஆனால், சோதனைச்சாவடிகள் அகற்றப்படுவதற்கு காரணமானவர்கள், அவற்றை அகற்றியதால் எழும் புதிய சிக்கல்களுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று கூற முடியுமா? கண்காணிப்பாளர்களாகவும் அதேவேளை இனப்பிரச்சினை தீர்வுக்கு அனுசரணையாளர்களாகவும் நோர்வே செயற்பட்டு வருகிறது. கண்காணிப்புப் பணி இனப்பிரச்சினை தீர்வுடன் தொடர்புபட்ட ஒரு விவகாரம்.

இனப்பிரச்சினை தீர்வு மொத்த இலங்கை மக்களது குறிப்பாக தமிழ் முஸ்லீம் சமூகங்களது எதிர்காலம் தொடர்பானது. அவர்களது அரசியல் உரிமைகள், அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பானது. எனவே இவற்றை நிராகரித்து திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கண்காணிப்பு குழுவின் பணிகளுக்கு அப்பாற்பட்டதென சுலபமாக ஒதுக்கிவிடமுடியாது.

எல்.ரி.ரி.ஈ அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுக்கும் ஏகபிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி வருகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் கொல்லப்பட்டவர்கள், கடத்திச்செல்லப்பட்டு காணாமல் போனவர்கள், தாக்கப்பட்டவர்கள் அனேகமானவர்கள் மாற்று அரசியல் கருத்துள்ளவர்கள், புலிகளின கருத்துக்கள், நடவடிக்கைகளோடு உடன்படாதவர்களே. இருப்பினும் புலிகள் இக்கொலைகளைச் செய்ததற்கான ஆதாரங்கள் இல்லை என அனுசரணையாளர்களும், கண் காணிப்பாளர்களும் கூறிவருவது ஆதாரமில்லாமல் இந்தக் கொலைகளைச் செயவதற்கு புலிகளுக்கு உந்துதலளிப்பதாகவே அமைந்துள்ளது.

எனவே ஒப்பந்தத்தில் உள்ளவாறு உலக சட்ட விதிகளின்படி மேற்படி செயல்களை தடுப்பதற்கு அனுசரணையாளர்களும், கண்காணிப்பாளர்களும் முன்வர வேண்டும். விதி 3இல் குறிப்பிடடவாறு தவறுகளை அவதானித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதற்கு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் போதவில்லை என்று கருதினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பெற்றுக்கொண்ட அனுபவங்களிலிருந்து ஒப்பந்தத்தின் விதி 4.3இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனை விடுத்து வெளிச் சக்திகளின் வேலை, ஆதாரம் இல்லை, இலங்கையின் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்ட பிரச்சினை, புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளை கண்காணிபபதே எமது பணி என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு விதமாக கூறுவது பிரச்சினைகளை முடிவுக்குக கொண்டுவர உதவாது.

மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம், அனுசரனை, கண்காணிப்பு என்பவற்றுக்கான தேவை எதனால் எழுந்தது என்ற கேள்விக்கான விடையே இந்த பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர உதவலாம்.

சக மனிதனின் சுதந்திரம் மதிக்கப்படாதவரை எந்த உரிமைகளும் எமக்குச் சுபிட்சத்தை கொண்டுவராது.

ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பத்துடன் படுகொலைகளும் ஆரம்பமாகிவிட்டது.

"கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது"

ஏகபிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொண்டால் துரோகிகள் மாமனிதர்களாகலாம்.

**சுபத்திரா**

# இணக்கப்பாட்டு அரசியலுக்கான......

01ம் பக்கத் தொடர்ச்சி

வடக்கு-கிழக்கு இணைப்பு தற்காலிகமாகச் சாத்தியமானது. இலலாவிடில் அதுவும் இலங்கையின் அதி உயர்சபைகளில் எரிந்திருக்கும்.

இன்று இணக்கப்பாட்டு அரசியலை சந்திரிகா முன்மொழிந்துள்ளார். ஆனால் கைகளை இறுகப் பிணைப்பதறகு வல்லமையுள்ள பொறுப்புள்ள சத்திகள் தலையிட வேண்டும்.

தென்னாபிரிககாவில் பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது அது கலாரசனைக்குரியதாக பல வண்ணங்களின் கலவையாக அமைந்திருந்தது.

நூறு கருத்துக்கள் மலரட்டும் என்பதுபோல் சமூகத்தின் சகல பிரிவினர், சகல தரப்பினரதும் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன.

மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் விடயங்களை யாரும் ஏகபோகமாக்கிக் கொள்ள முடியாது. தெற்கில் மாறுபாடான அரசியல் கருத்துக்களுக்கு இடமிருக்கிறது. ஆனால் வடக்கு-கிழக்கில் அதுவும் கிடையாது.

எனவே அரசியல் பன்மைத்துவமும், இணக்கபாடும் அவசியம். வேற்றுமையில் ஒற்றுமை என்பதே இன்றைய நிலவரங்களில் அவசியப்படுகின்றன.

போட்டி மனப்பான்மை மற்றவர்களின் உரிமைகளை குரூரத்தனமாக மறுப்பதாகவே அமைகிறது. நாடு சந்தித்த இரத்தகளரி போதும்! இந்தப் பேரழிவைக் கருத்திற்கெடுத்து அர்த்தமுள்ள வாழ்வை சகல சமூகங்களிற்கும் ஏற்படுத்திக் கொடுக்க நாம் எம்மால் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.

மனித உரிமையும், ஜனநாயக சமூக பொருளாதார மறுமலர்ச்சியும் இணக்கபாடும் எம்முடைய கனவு.

எமது பிரதேசங்களில் நம் மககள் எரிந்தமுகத்துடன் பேயறைந்த முகத்துடன், அல்லது பீதியின நிழல் படர்ந்த முகத்துடன் இருண்ட முகத்துடன் அல்லாமல் மலர்ந்த முகத்துடன் வாடாத பூக்களைப்போல் வாழ இணக்கபாடும் இரத்த களரியும் அற்ற அரசியல் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

# இடைக்கால தீர்வு ........

06ம் பக்கத் தொடர்ச்சி

முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விடயங்கள் அகதிகள், பெண்கள், சிறார்களின் பிரச்சினைகளே.

ஆனால் புலிகளின் இடைக்கால யோசனைகள் தன்மையவாத நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. அவர்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால யோசனைகளில் புலிகளின் அறுதிப் பெரும்பான்மை, புலிகளின் மேலாண்மை என்பது வலியுறுத்தப்படுகிறது. இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லீம்கள், சிங்களவர்கள், என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் தமிழர்கள் என்ற வார்த்தை மிக அரிதாகவே காணப்படுகிறது.

மாற்று கட்சியினருக்கோ அல்லது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் மாற்று சக்திகளுக்கோ எவ்வித இடைவெளியும் இங்கு இல்லை. இது ஜனநாயகம் தொடர்பான பாரிய பிரச்சினையாகும்.

மனித உரிமைகளை பேணுவதற்கென ஒரு கமிசன் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கமிசனை சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கேற்ப புலிகளே அதனை அமைப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோல் சட்டம் ஒழுங்கு நீதித்துறை சார்ந்த முழுமையான அதிகாரங்களையும் [illegible] கோருகிறார்கள்.

இங்கு சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் தொடர்ச்சியாக மாற்று கட்சியினருக்கு எதிராக பல வன்முறைகள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொலைகள், ஆட்கடத்தல் போன்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளன.

இவை பற்றி வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஏராளமான முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமை கண்காணிப்புக்குழு ஆகியன இவை தொடர்பாக புலிகள் மீது ஆதாரபூர்வமான விமர்சனங்களை முன்வைத்துள்ளன. அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் இவற்றைப்பற்றி தமது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளன. முஸ்லீம் மக்கள் தமது வருங்கால சந்ததியினது எதிர்காலம் பற்றி கவலை கொண்டுள்ளனர். வன்முறையற்ற வரி விதிப்பு, வடக்கு-கிழக்கு வாழ் மக்களை விரக்தியின் விளிம்பிற்கு கொண்டு சென்றுள்ளது.

எனவே பன்முகத்தன்மை, ஜனநாயகம், மனித உரிமை என்ற அடித்தளத்திலேயே அதிகாரப் பகிர்வு கட்டமைப்பு கட்டியமைக்கப்பட முடியும்.

இடைக்காலம் நான்கு வருடங்களுக்கு நீடிக்கும் என்றும் அதன் பின்னர் சர்வதேச கண்காணிப்புடன் தேர்தல் ஒன்றை புலிகள் வடக்கு-கிழக்கில் நடத்துவார்கள் என்றும் கூறப்படுகிறது.

இதுவும் மக்களின் தெரிவுச் சுதந்திரத்தின் மீதான ஜனநாயக மறுப்பு செயற்பாடாகும். உண்மையில் இந்த தேர்தல் நடத்துவதற்கான அமைப்பு மிக மிக சுதந்திரமானதாக இருக்க வேண்டும்.

புலிகள் இத் தீர்வு யோசனைகளில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப சர்வதேச கண்காணிப்புக்குழு என்று கூறுவதெல்லாம் அவர்களின் கேள்விக்கிடமற்ற அறுதிப் பெரும்பான்மை என்ற கூற்றுடன் அடிப்படையிலேயே முரண்படுகின்றன.

சர்வதேச நியமங்கள் பெறுமானங்கள் மனித உரிமை தராதரங்கள், ஒரு குறிப்பிட்ட அணியினர் மக்களின் தலைவிதியை ஒரேயடியாக தீர்மானிப்பதை அங்கீகரிக்கவில்லை.

புலிகள் தமது அமைப்பின் கட்டமைப்பை இங்கு ஒரு அதிகாரப் பகிர்விற்கான நிர்வாக கட்டமைப்பிற்கு மொழி பெயர்த்துள்ளார்கள். இது சமூகத்தில் வெவ்வேறு அபிப்பிராயங்கள், கருத்து நிலைமைகள், ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமைகளுக்கு மாறான நிலைப்பாடாகும்.

இந்த உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதில்தான் மக்கள் உண்மையான சுதந்திரத்தையும், சுபிட்சத்தையும் அடைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மௌனம் கலையவேண்டும்




தோழர் அழகத்துரை முன்னாள் போரதீவு பிரதேசசபை உபதலைவர்

15 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலை இயக்கங்களால தமிழ்பேசும் மககளுக்கான உரிமை போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

1986ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இயக்கங்களுக்கு எதிராக புலிகளின் படுகொலைத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்போராட்டம் பலவீனமடைந்தது, மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் போராட்டத்தின் மேல் அவநம்பிக்கை ஏற்பட்டது.

பயம்-விரக்தி மக்களிடமிருந்து இயக்கங்கள் ஜனநாயக விரோத வழிகளில் அன்னியப்படுத்தப்பட்டமை உயிரைப் பாதுகாப்பதற்கு ஆயுதங்களை நம்பியிருக்கவேண்டிய நெருக்குதல்கள் மக்களுக்கும் போராட்டத்திற்கும் தொடர்பற்றுப்போன சூழல், புலிகளின் மேல் அவநம்பிக்கை, விரக்தி புலிகள் தங்கள் மேலாண்மையை மக்கள் மேல் நிலை நிறுத்த மேற்கொண்ட தொடர் படுகொலைகள், அநியாய உயிர்பலிகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக மாற்று கட்சிகள் ஒதுங்கியமை போன்ற பல்வேறு காரணிகளால் வடக்கிலும், கிழக்கிலும் பல பகுதிகளில் படைகளின் பிரசன்னம் நிகழ்ந்தது.



இந்தச் சூழலில்தான் தமிழ் மக்களுக்கு நியாய பூர்வமான குறைந்தபட்ச உரிமைகளையாவது நிலை நாட்டுவது என்ற அடிப்படையில் 1987ம் ஆண்டில் இந்தியாவின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் புலிகளால் திட்டமிட்ட முறையில் சீர்குலைக்கப்பட்டன.

அது மட்டுமன்றி ஆயுதக் கடத்தல், மாற்றுக்கட்சி உறுப்பினர்களை படுகொலை செய்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. இதனைத் தொடர்ந்து சமாதானம் புரியவந்த இந்தியப் படையுடன் போரை ஆரம்பித்தனர்.

இந்திய அரசு வடக்கு-கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தி மாகாணசபையின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கான அடிப்படை அதிகாரப் பரவலாக்கலுக்கு வித்திட்டது.

### புலிகள் பிரேமதாசா அரசு கூட்டு

புலிகள் பிரேமதாச அரசுடன் கூட்டுச் சேர்ந்து அதிகாரப்பரவலூடாக உருவான மாகாண அரசு செயற்படுவதை அதனூடாக மக்களுக்கு பலாபலன்கள் எதுவும் கிட்டாமல் தடுப்பதில் தீவிரமாக இருந்தனர்.

புலிகளுக்கும்-பிரேமதாச அரசுக்குமிடையே நேரடியாகவும் மறைமுகமாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இருதரப்பினரும் சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிக்கு எதிராகவும் அதனை இல்லாதொழிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

மாகாணசபைக்கு உரிய அதிகாரங்களை வழங்கக்கோரி முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் 01-03-1990 அன்று பிரேரணை ஒன்றை மாகாணசபையில் சமர்ப்பித்தார். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் சாாபாக வாக்களித்து உரையாற்றினர்.

மாகாணசபையின் செயற்பாடுகளை அவதானித்து வந்த ஜனாதிபதி பிரேமதாசா புலிகளுடன் பேசி கூட்டுச்சேர்ந்து ஒருதலைபட்சமாக இதன் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கும், கலைப்பதற்குமான முயற்சிகளில இறங்கினார். இறுதியில் அந்த முயற்சிகளில் வெற்றியும் பெற்றார்.

புலிகளின் படுகொலைத் தாக்குதல்களில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு மாகாணசபை உறுப்பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கட்சியினர் ஆதரவாளர்கள் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

### சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு

1994இல் பதவிக்கு வந்த சந்திரிகா அரசு சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வு தீர்வுத் திட்டத்தை 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைத்த போது ஐ.தே.க கட்சி அந்த யோசனைகளின நகலை பாராளுமன்றத்தில் கிழித்து எரித்தது.

தற்போது மீண்டும் புலிகளும் ஐ.தே.க அரசும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து இடைக்கால நிர்வாகம் பற்றி பேசும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்.அதிகாரப்பகிர்வு தொடர்பாக சந்திரிகா அவர்கள் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்.

ஆனால் நியாயபூர்வமான எல்லைகளுக்கப்பால் பிரிவினையை நோக்கிய போக்கை அவர் ஆதரிக்கவில்லை. ஜே.வி.பி அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஒரு நிலைப்பாட்டிற்கு வரமுயற்சிக்கிறது. சிஹல உறுமய இனவாதம் பேசிக்கொண்டிருக்கிறது.

ஒரு சில தமிழ்கட்சிகள் புலிகளின் குரலாகவும்-மாற்றாகவும் சிங்கள கட்சிகள் மறுபுறம் பலவாகவும் பிரிந்து நிற்கின்றன. பகைமை, குரோதம் முரண்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

### சமாதான ஒப்பந்தத்தின் பின்னான அராஜகம்

இவ்வேளையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியபின் புலிகளினால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில்:-

* 30 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

* 32 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

* 38 பேர் சுடப்படட்டும், தாக்குதலுக்குள்ளாகியும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

* 05 முஸ்லீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

* 18 முஸ்லீம்கள் தாக்குதலுக்குள்ளாகியும் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

* 16பேர் 19 வாகனங்களுடன் (தமிழ், முஸ்லீம், சிங்களம்) கடத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமாக இதுவரை 139 பேர் கொலை செய்யப்பட்டும், காயமடைந்தும், கடத்தப்பட்டும் உள்ளனர்.

### மக்களின் அர்ப்பணம்

ஒன்றரைத் தசாப்தத்திற்கு மேலாக விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் பேசும் மக்கள் ஏதோ வொருவகையில் தங்களது ஆதரவை வழங்கினர். குறிப்பாக பணம்,பொருள் உதவி செய்தனர். உணவும் இருப்பிடமும் கொடுத்து உபசரித்தனர். இயக்கங்களுக்கு தங்கள் பிள்ளைகளை மனமுவந்து அனுப்பிவைத்தனர்.

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் கல்விமான்களின் ஆதரவு பலமாக இருந்தது. பல ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறை சென்றார்கள். சித்திரவதைகளை அனுபவித்தனர்.இளைஞர்களும், யுவதிகளும் போராட்டக்களத்தில் உயிர்த் தியாகம் செய்தனர். போராட்டம் மக்கள் இயக்கமாகப் பரிணமிப்பதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருந்தது.

போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கானோர் அங்கவீனமடைந்தார்கள். பலர் தமக்கு நெருகியவர்களை நேசித்தவர்களை இழந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் இவ்வாறான அர்ப்பணத்துடனான தியாகத்துடனான ஆதரவை வழங்கியதே இயக்கங்கள் வளர்ச்சி பெறுவதற்கு ஊன்று கோலாக அமைந்தது. அனைவரும் சுதந்திரமாகவும்,ஜனநாயக ரீதியாகவும் தாமாக முன்வந்து தங்களது பங்களிப்பை செய்தனர்.

இவ்வாறு அனைத்து இயக்கங்களின், மக்களின் பங்களிப்பை நிராகரித்துவிட்டு தாங்கள் மாத்திரம்தான் போராடியவர்கள்,மக்க [illegible] [illegible] நாயகத்துக்கு முரணானது.

இவ்வாறு புலிகளின் ஜனநாயக விரோத அராஜகத்தினால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியை சேர்ந்தோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை முதல்வர்கள், நகரசபை, பிரதேசசபை உறுப்பினர்கள், கல்விமான்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு தமிழனை தமிழன் படுகொலை செய்யும் போது சமாதானம் எவ்வாறு சாத்தியப்படும்.

உண்மையான சமாதானம் நிலை பெற வேண்டுமானால் புலிகள் மாற்றுக் கருத்து கொண்டோரை படுகொலை செய்வது

**இரா. துரைரெத்தினம்**
**ஈ.பி.ஆர்.எல்.எவ்**

நிறுத்தப்பட வேண்டும். மக்கள் சுதந்திரமாக, ஜனநாயக ரீதியாக செயற்படும் உரிமை இருக்க வேண்டும்.

அனைத்து தமிழ், முஸ்லீம் கட்சிகளும், சிங்கள முற்போக்காளர்களும் ஒன்று சேர்ந்து தமிழ் பேசும் மக்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வு யோசனைகளை முன்வைக்கவேண்டும்.

இவ்வாறே தேசிய சிங்களக் கட்சிகள் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கு நியாய பூர்வமான தீர்வை முன்வைக்க வேண்டியது அவசியமானதும, கட்டாயமானதுமாகும்.

இத்தோடு இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் உதவியும், அனுசரணையும் அவசியமானது. இருதரப்பினரும் பல கோணங்களில் பிரிந்து நின்று பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. ஒவ்வொருவரும் குழப்பம் வருவதற்கான அடிப்படை காரணங்களை கண்டுபிடித்து அவரவர் தவறைத் திருத்திக்கொண்டு பிரச்சனையைத் தீர்க்க முனவராது போனால் அதிகாரப்பங்கீடு சமாதானம் சாத்தியப்படாமல் போகலாம். இந்த முடிவை நடைமுறைபடுத்த வேண்டுமாயின் மக்கள் தங்களது மௌனத்தை கலைக்க வேண்டும்.

மக்கள் மௌனமாக இருப்பதே ஜனநாயக விரோத சக்திகளையும் இனவாதிகளையும் அங்கீகரிப்பது போலாகும். மக்களே மௌனமாக இருக்காதீகள்! இன்னும் இருப்பீர்களேயானால் நீங்கள் உடை உடுத்துவதற்கும், இயற்கைக் காற்றை சுவாசிப்பதற்கும் அனுமதி பெறவேண்டிய நிலை ஏற்படும்.

சமாதான ஒப்பந்தத்தின் பின்னான அராஜகம்

இவ்வேளையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியபின் புலிகளினால் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில்:-

* 30 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

* 32 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

* 38 பேர் சுடப்பட்டும், தாக்குதலுக்குள்ளாகியும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

* 05 முஸ்லீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

* 18 முஸ்லீம்கள் தாக்குதலுக்குள்ளாகியும் வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

* 16பேர் 19 வாகனங்களுடன் (தமிழ், முஸ்லீம், சிங்களம்) கடத்தப்பட்டுள்ளனர்.

* மொத்தமாக இதுவரை 139 பேர் கொலை செய்யப்பட்டும், காயமடைந்தும், கடத்தப்பட்டும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமாதான நெருக்கடி

நோர்வே தற்காலிகமாக தனது அனுசரணையாளர் வேலையை நிறுத்திக் கொண்டதையடுத்து இலங்கையில் ஒரு சமாதான நெருக்கடி தோன்றியுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை கையேற்றதன் பின் எழுந்த சூழ்நிலையை அடுத்தே நோர்வே இவ்வாறு நடந்து கொண்டுள்ளது.

இலங்கையில் கால் நூற்றாண்டு கால யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வந்து பிரச்னைகளைத் தீர்த்து நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதென்பது இலேசான பணியல்ல.

ஆனால் அந்த பணியை நோர்வே முன்னெடுத்தது ஒரு சிறப்பான செயலே. ஆனால் அந்த பொறுப்பை ஏற்கும் போதே நோர்வே அரசுக்கு இலங்கையின் இன முரண்பாட்டு சிக்கலின் பரிமாணம் எத்தகையது என்று தெரியாமல் இருந்திருக்கமுடியாது.

இங்கு தமிழ் மக்களின் முஸ்லீம் மக்களின் இனரீதியான அபிலாசைகள் மாத்திரமல்ல ஜனநாயம், மனித உரிமை பன்முகத்தன்மை போன்ற ஜீவாதாரமான விடயங்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தன என்பது அவர்கள் விளங்கியிருக்கக் கூடியதே.

அவர்கள் இங்கு பிரசன்னமாக இருந்த காலத்திலேயே வகை தொகையின்றி வடக்கு-கிழக்கில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருகின்றன.

இலங்கையின் தேசிய அரசியலில் ஒரு அரசு மேற்கொள்வதை மற்றைய அரசு நிராகரிப்பது என்ற போக்கு 50 ஆண்டு இலங்கையின் துன்பியல் அரசியல். இந்த இலங்கையின் அரசியல் அரிச்சுவடி தெரியாமல் நோர்வே இலங்கையில் பிரவேசித்திருக்க முடியாது.


ஆனால் இம்முறை ஜனாதிபதி அரசியல் சட்டத்தின் படியும் நீதிமன்ற முடிவுகளின் அடிப்படையிலுமே செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால தான் இணக்கப்பாட்டு அரசியலுக்கு தயாராக இருப்பதாகவும் அதிகாரப்பகிர்விற்கு தான் தயாராக இருப்பதையும் திரும்பத்திரும்பத் தெரிவித்தார்.

இதனை நோர்வே அனுசரணையாளர்கள் ஒரு சாதகமான மாற்றமாக ஏன் கருதியிருக்க முடியாது. இரண்டு தரப்பினருக்குமிடையே இணக்கபாட்டு அரசியலுக்கான ஒரு வாய்ப்பாக அதனைப்பயன்படுத்தியிருக்கமுடியும். அவர்கள் இணக்கப்பாட்டு அரசியலை வலியுறுத்தி தமது அழுத்தப்பிரயோகமாக இதனைக் கருதியிருந்தால் அதில் ஓரளவு நியாயம் உண்டு.

ஆனால் குறிப்பிட்ட சில தரப்பினரின் ஏகபோகமாகப் பேச்சுவார்த்தைகள் மாறிவிடாமல பார்த்துக கொள்வதிலும் நோர்வேக்கு பொறுப்பு உண்டு.

ஜனாதிபதி சந்திரிகா அதிகாரப்பகிர்வை கொள்கை ரீதியாக ஆதரிக்கின்ற ஒருவர். வடக்கு -கிழக்கு தற்காலிக இணைப்பை ரத்துச் செய்யக் கோரி பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதும் அவர் தற்காலிக இணைப்பை நீடித்துள்ளார். அவர் தொடர்ந்தும் நோர்வேயின் அனுசரணையாளர் பொறுப்பை வரவேற்றுள்ளார்.

ஆனால் இந்தியாவை இவ்வி



டத்தில் நாம் ஞாபகத்திற்கு கொண்டுவராமல் இருக்கமுடியாது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் இலங்கைத் தமிழர் வாழ்விலும் இலங்கையின் தேசிய வாழ்விலும் மறுசீரமைப்பை ஏற்படுத்த முயன்ற போது தமிழ் சிங்கள அடிப்டைவாதிகள் தேசபத்தி என்று பாசாங்கு செய்து இந்தியாவை வெளியேறக்கோரினர்கள்.

இந்தியா வெளியேறியபோது இந்தியாவின் பிரசன்னம் இங்கு இருக்கவேண்டும் என்று யாரும் கூற முன்வரவலிலை. இன்று உலகில் யாருக்கும் கம்பளம் விரிக்க தயாராக இருக்கிறர்கள்.

இலங்கையின் இனப்பிரச்சனையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றதில் இந்தியாவின் பங்களிப்பு மறுதலிக்க முடியாதது.

நாம் வாழும் தென்னாசியச் சூழலில் அறுதியும்-இறுதியுமான தீர்வு இந்தியாவின் பங்களிப்பை பிரதானமாக உள்ளடக்கியதே.

இநத நாட்டின் முன்னேற்றமும் எதிர்காலமும் இந்தியா என்னும் மாபெரும் தேசத்துடன் இணைந்ததே. இன்று தென்படும் கவர்ச்சிகரமான சில தோற்றப்பாடுகளுக்காக இந்தியாவின் கனதியான பங்களிப்பை உதாசீனப்படுத்தி விடமுடியாது.

அதிகாரப்பகிர்வு பல்வேறு சமூகங்கள் சேர்ந்து வாழுதல் தொடர்பில் இந்திய தத்துவஅரசியல் மரபுகளில், இந்திய அரசியல் யாப்பில் நடைமுறை வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன.

இலங்கையில் இடைக்காலத் தீர்வோ அதனுடன் இணைந்த இறுதித்தீர்வோ இந்தியாவின் கவனத்திற்கும் அக்கறைக்குரியதே. எமது மக்களின் அபிலாசை, இந்தியாவின நலன்கள் அபிலாசைகளுக்கிடையே நாம் ஒரு இணக்கப்பாட்டை காணவேண்டும்.

தற்போது யுத்த நிறுத்தம் நோர்வே அனுசரணையாளர்கள் போன்தன் பின்னரும் தொடர்கிறது. போரை விரும்பாத பெரும்பான்மை மக்களின் அபிலாசையே எமது அபிலாசையும். ஆனால் அது தொடர்ந்து நிச்சயமற்ற நிலையில் நீடிக்க முடியாது.

உறுதியான தளத்தில் அது பாதுகாக்கப்படுவதும் பல்முனைப்பங்களிப்புடன் இறுதித்தீர்வை நோக்கிச் செல்வதும் முக்கியமானதாகும். எனவே மீண்டும் நோர்வே இந்தியாவுடன் இணைந்து தனது பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டும்.

இலங்கையின் சமூக பொருளாதர வாழ்வு நேர்த்தியான திசையில் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். மாபியா மயப்படுத்தப் பட்ட அபாயகரமான வாழ்நிலையிலிருந்து மிட்கப்படவேண்டும்.

வன்முறையற்ற சுதந்திர நாகரிக உலகை நோக்கி ஒரு சில அடிகளையாவது நாம் முன்வைக்கவேண்டும். சட்டவிரோத நடைபாதை வியாபாரிகள் போன்று இன்று கிடைப்பதை எடுத்துச் செல்வோம். நாளை என்ன நடக்கும் என்று தெரியாது என்ற பாணியில் தான் பெரும்பாலான அரசிலவாதிகள நடந்து கொள்கிறார்கள். எமது அரசியலும் செல்லரித்து விட்டது.

எனவே சகல துறைகளிலும் சமூகவிழுமியங்களைப் பாதுகாப்பதற்கு இன்று அடிப்படையான மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அதுதான் இனங்களின் அபிலாசைகள் பாதுகாக்கப்படுவதும் சகல சமூகங்களினதும் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதும்.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் புத்தாக்கம் செய்யப் படவேணடும்.

# இடைக்கால தீர்வு யோசனைகள்


புலிகள் தமது இடைக்கால தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளார்கள். இந்த யோசனைகள் பற்றி பல்வேறுவிதமான அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன. வெளிவருகின்றன.

இலங்கையில் அதிகார பரவலாக்கல் தொடர்பாக வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், மாவட்ட அபிவிருத்திச் சபை, வட்டமேசை மாநாடு, இந்திய-இலங்கை ஒப்பந்தம், மங்கள முனசிங்க கமிட்டி பொதுஜன முன்னணியின் அதிகார பகிர்வு யோசனைகள் ஐக்கிய தேசிய கட்சி அரசின் இடைக்கால யோசனைகள் என பல முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 1987இல் கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனடிப்படையில் அதிகாரப் பகிர்வை செயற்படுத்துவதற்கான கனதியான ஒரு முயற்சி 1988 இலிருந்து 1990 வரை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கத்துவம் வகித்து வடக்கு கிழக்கு மாகாண சபையினால் முன்னெடுக்கப்பட்டது.

இந்தியாவின் அனுசரணை அதற்கு முழுமையாக இருந்தது. துரதிஷ்டவசமாக அதிகார பகிர்வுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் உள்ளூரில் மேற்கொள்ளப்பட்ட சீருலைவு முயற்சிகள் அதனை தொடர முடியாமல் செய்தன.

ஆனால் வடக்கு-கிழக்கு தற்கா



லிகமாகவேனும் இணைக்கப்பட்டதும், திருகோணமலையை தலைநகராகக் கொண்ட ஒரு நிர்வாக கட்டமைப்பு இன்றளவும் நிலவுகிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அதிகார பகிர்வை நடைமுறைப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து அதிகார பகிர்வுக்காகவும் நின்ற தலைவர்கள் பலர் தமிழ் சமூகத்தின் உள்ளிருந்தே கொல்லும் வியாதியினால் அழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தோழர் பத்மநாபா, தலைவர் அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்றவர்களின் மரணங்களும் பல தோழர்கள், போராட்டக்காரர்களின் மரணங்களும் அந்த வகையைச் சேர்ந்தனவே.

தற்போது வரலாறு ஒரு வட்டம் சுற்றி வந்துவிட்டது. புலிகள் அரசின் இடைக்கால யோசனைகளுக்கு மாற்றாக தமது யோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும் என்பதிலோ, அதற்குரிய உறுதியான நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதிலோ யாருக்கும் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது.

கடந்த கால்நூற்றாண்டு கால வரலாற்றில் திரும்ப திரும்ப தமிழ் மக்களால் வலியுறுத்தப்படுவது அதுவே. சிங்கள மக்களுடன் பாரபட்சமின்றி சமத்துவமாக வாழ்வதற்கான கோரிக்கை அது. சமூக பொருளாதார அபிவிருத்தியை எத்தகைய தங்குதடையுமின்றி அனுபவிப்பதற்கான நியாயமான உரிமையின் பாற்பட்டது அது. முஸ்லீம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் அத்தகைய வளர்ச்சி பற்றிய கோரிக்கைகள் உண்டு.

வடக்கு கிழக்கில் கடந்த கால் நூற்றாண்டு கால யுத்தத்தில் அகதிகளாகி அல்லல்படும் மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் தாமதிக்கப்பட முடியாதவை. அவை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். எந்தத் தீர்வு வந்தாலும் உடனடியாக

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் மோகனை விடுதலை செய்ய உதவுவீர்!

திருமலையைச் சேர்ந்த தோழர் கோவிந்தன் மோகன் இவர் கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கான சுயேச்சைக்குழு திருமலை வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்.

29.10.2003 அன்று மாலை திருமலை பத்தாம் நம்பரில் வசிக்கும் தோழர் மோகன் தனது வலைகளைப் பழுது பார்த்து விட்டு தனது மனைவியிடம் 50 ரூபா பணம் வாங்கிக் கொண்டு அருகிலுள்ள கடைக்குச் சென்றவர் இன்று வரை வீடுதிரும்பவில்லை. இவர் நாலு பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்த விடயம் திருமலையிலுள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் திருமலைப் பொலிசிற்கும் அவரது குடும்பத்தாராலும், திருமலை ஈ.பி.ஆர்.எல்.எஃப் காரியாலயத்தினாலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரை புலிகள் தான் கடத்திச் சென்றார்கள் என்பதை தெளிவாக ஊகிக்க முடிகிறது. ஏனெனில் இது போன்ற பல சம்பவங்கள் மாற்று அரசியல்கட்சிகளைச் சோந்தவர்கள் ஆதரவாளர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவரது விடுதலை தொடர்பாக எந்தவித உருப்படியான நடவடிக்கையும் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரது குடும்பத்தவர்கள் உறவினர்கள் பலரும் கடந்தகால் நூற்றாண்டுகால போரின்போது பல இழப்புக்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவரை நம்பியே இவரது குடும்பம் தனது ஜீவனோபாயத்தை நடத்தி வந்தது.

நாகரிகமான மக்கள் பிரிவினர் இத்தகைய கடத்தல்களுக்கெதிராக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org